R4882

# RIVER OF WATER OF LIFE
# ஜீவத்தண்ணீரின் ஆறு

எசேக்கியேல் 47:1-12

"விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாக வாங்கிக் கொள்ளக்கடவன். " வெளிப்படுத்தல் 22:17

இந்த பாடத்தில் கூட மேசியாவின் யுகத்தைப் பற்றிய ஒரு சித்திரத்தை எசேக்கியேல் மூலமாக தேவன் நமக்கு தருகிறதை நாம் காண்கிறோம். இது எழுநூறு வருடங்களுக்கு பிறகு கொடுக்கப்பட்டதற்கு ஒத்ததாக இருக்கிறது.

எருசலேம் மற்றும் தேவனுடைய ஆலயத்தின் ஜீவத்தண்ணீரின் ஆற்றுக்கு ஆரம்பமாக எசேக்கியேலின் சித்திரம் காண்பிக்கிறது. அதே போல் வெளிப்படுத்தலின் பதிவிலும் இருக்கிறது. ஆறு ஒரு சிற்றோடையிலிருந்து ஆரம்பித்து ஆழமாகி, அகலமாகி ஒரு பெரும் நதியாகிறதை எசேக்கியேல் காண்பிக்கிறார். அது போகுமிடமெல்லாம் ஜீவனை எடுத்துக்கொண்டு சவக்கடலை அடைகிறது என்று அவர் காண்பிக்கிறார்.

சவக்கடல் ஆரோக்கியமடைந்து, புதுப்பிக்கப்பட்டு உப்புத்தன்மை நீக்கப்பட்டு மீன்களால் நிறைந்திருக்கும் என்று அவர் காண்பிக்கிறார். இப்படிப்பட்ட எந்த ஆறும் எருசலேமில் உருவானதில்லை. அப்படிப்பட்ட நதி மலையின் உச்சியில் உருவாகி குறைந்த தூரத்தில் இப்படிப்பட்ட பரிமாணத்தை அடைந்ததில்லை.

இந்த விளக்கம் ஒரு பெரிய ஆவிக்குரிய சத்தியத்தை காண்பித்து வெளிப்படுத்தலின் சித்திரத்திற்கு முழுவதுமாக ஒத்திருக்கிறது. அது புத்துணர்ச்சி மற்றும் இளைப்பாறுதலின் ஆசீர்வாதங்களை அழகாகவும் பலமாகவும் குறிப்பிடுகிறது. புதிய எருசலேமாகிய மேசியாவின் ராஜ்யம் மனிதர்களிடையே ஸ்தாபிக்கப்படும் போது அது வழங்கப்படும் மேசியாவின் மகா வல்லமையான செல்வாக்கு படிப்படியாக சகல மனுக்குலத்திற்கும் ஆசீர்வாதங்களை விரிவுப்படுத்தும். சவக்கடலினால் குறிப்பிடப்படுகிற மூட நம்பிக்கையிலும் அறியாமையிலும் மூழ்கியிருக்கிற வகுப்பாருக்கும் கூட விரிவுப்படுத்தப்படும்.

புதிய எருசலேமாகிய சிங்காசனத்தின் கீழேயிருந்து பளிங்கைப் போன்ற தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி புறப்பட்டு வருகிறதை வெளிப்படுத்தலின் புத்தகம் காண்பிக்கிறது. அதன் இரு கரைகளிலும் உணவுக்கு சிறந்த கனிகளை தரக்கூடிய ஜீவ விருட்சங்கள் இருந்தன. எசேக்கியேல் இதே சித்திரத்தை மனதில் கொண்டிருக்கிறார். நதியின் இரு கரைகளிலும் அதே விருட்சங்கள் இருக்கும்; அவைகளின் இலைகள் உதிருவதுமில்லை. அவைகளின் கனிகள் கெடுவதுமில்லை. அவைகளுக்கு தண்ணீர் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து பாய்கிறபடியால் மாதந்தோறும் அவைகள் புதுக்கனிகளை கொடுத்துக்கொண்டேயிருக்கும் என்று அவர் கூறுகிறார். "அவைகளின் கனிகள் புசிப்புக்கும் அவைகளின் இலைகள் அமிழ்தத்துக்கும் பிரயோஜனமானவைகள்." இதே போல வெளிப்படுத்தின விசேஷத்திலும் "அதின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியம் அடைவதற்கு ஏதுவானவைகள், அதன் கனிகள் நித்திய ஜீவனை தக்கவைத்துக் கொள்ள ஏதுவானவைகள். தண்ணீர் அவர்களது புத்துணர்ச்சிக்கு ஏதுவானவைகள் என்று சொல்லுகிறது. பிறகு, ஆவியும் மணவாட்டியும் வா" என்று கூறி உலகலாவிய அழைப்பை கொடுக்கிறார்கள். விருப்பமுள்ளவன் வரக்கடவன். இந்த அழைப்பை கேட்கிறவனும், "வா, விருப்பமுள்ளவன் ஜீவத்தண்ணீரை இலவசமாக வாங்கிக் கொள்ளக்கடவன்" என்று கூறி மற்றவர்களையும் அழைப்பானாக.

### "ஜீவத்தண்ணீரின் ஆறு" இப்பொழுது இல்லை

இந்த அடையாளங்களை நாம் பயன்படுத்தும் போது அவைகள் தற்காலத்திற்கு அல்ல, எதிர்காலத்திற்கு என்று உறுதிப்படுத்துகிறோம். வெளிப்படுத்தின விசேஷத்தின் நதி இப்போது எங்கே இருக்கிறது? ஜீவ விருட்சகளும் அதின் இலைகள் ஆரோக்கியமாவதற்கு ஏதுவானவைகளாக எங்கே இருக்கின்றன? மாறாக, நமது கர்த்தருடைய வார்த்தைகள் கூறுவதாவது: "என்னை அனுப்பின பிதா ஒருவனை இழுத்துக்கொள்ளாவிட்டால் அவன் என்னிடத்தில் வரமாட்டான்." வேறு வார்த்தைகளில் கூறுவோமானால், "ஆட்டுக்குட்டியானவரின் மனைவியாகிய மணவாட்டியை" அமைக்கிற வகுப்பாரை அழைப்பதற்கு ஒரு தேர்வு முறை இருக்கிறது. "அழைக்கப்பட்டாலொழிய, ஒருவனும் இந்த கனமான ஊழியத்துக்கு தானாய் ஏற்படுகிறதில்லை."

இந்த யுக முடிவில் தெரிந்தெடுத்தல் செயல்முறை முடிவுக்கு வரும். பிறகு தெய்வீக செய்தி, இலவசமான கிருபை ஆதாமின் சந்ததி ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பமும் சலுகையும் வரும். குருடரின் கண்கள் யாவும் திறக்கப்பட்டு, செவிடரின் செவிகள் திறவுண்டுபோம். கர்த்தரின் மகிமையின் அறிவினால் பூமி நிறைந்திருக்கும். இனி ஒருவனும் தன் அயலானை நோக்கி, "கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை. ஏனெனில் அவர்களில் சிறியவன் முதல் பெரியவன் மட்டும் கர்த்தரை அறிந்து கொள்வார்கள்." (எரேமியா 31:34)

### "வா" என்று மணவாட்டி சொல்ல வேண்டாம்

கிறிஸ்துவின் மணவாட்டியும் பரிசுத்த ஆவியும் வந்து, ஜீவத்தண்ணீரை இலவசமாய் பருகுங்கள் என்று ஒவ்வொரு சிருஷ்டியையும் அழைக்கிறார்கள் என்று வெளிப்படுத்தின விசேஷம் நமக்கு சொல்லுகிறது. மணவாட்டி உருவாகிறதற்கு முன்னர் இந்த அழைப்பை எப்படி கொடுக்க முடியும்? தற்காலத்தில் மணவாட்டி இன்னும் வெளிப்படவில்லை. இந்த காலம் மணவாட்டி வகுப்பாரை அழைக்கும் காலமாக இருக்கிறது. தற்போது அழைக்கப்பட்டவர்கள் தங்கள் "அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிப்படுத்தும்" காலமாக இருக்கிறது, புதிய யுகம் வரும்வரை "மணவாட்டி" இல்லை. மணவாட்டி என்ற பெயர் ஒரு கலியாணத்தை குறிக்கிறது. சபையானது முன்னரே கிறிஸ்துவுக்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் கலியாணமானது அவரது இரண்டாம் வருகையில் நடக்கும் என்று வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது. அப்பொழுது ஒரு மணவாட்டி இருக்கும். அதன்பிறகு அவளது கர்த்தருடன இணைந்து பரலோக புதிய எருசலேமில் ராஜரீக அதிகாரத்துடன் இருக்கும். பூமியின் பேரரசாகிய

அந்த நகரத்திலிருந்து தேவனுடைய செய்தி படிப்படியாக ஆழமும் அகலமுமாகி மனுக்குலத்தின் ஒவ்வொரு அங்கமும் அதன் ஜீவத்தண்ணீரின் ஆசீர்வாதங்களில் பங்கு பெறும் சந்தர்ப்பத்தை பெறுவார்கள்.

மனுக்குலத்திற்கு வரக்கூடிய இந்த மகிமையான சலுகைகளை நினைக்கும் போது அவை அனைத்தும் பூமிக்குரியது, இழந்து போனதை திரும்பப் பெறுவது என்பதை நாம் நினைவு கூருவோமாக. பூமிக்குரிய ஒளியும் மானிட பூரணமும், கீழ்ப்படிதலும் விருப்பமும் உள்ள மனுக்குலத்திற்கு பொதுவாக தேவன் அருளியவை ஆகும். கிறிஸ்துவின் மணவாட்டியின் அங்கமாகிறதற்கான அழைப்பு வரையறுக்கப்பட்ட ஒன்று. ஒரு குறிப்பிட்ட காலத்துக்குரியது. நாம் வேதத்தை புரிந்துகொண்டது சரியாக இருக்குமானால் இந்த விசேஷித்த சந்தர்ப்பத்தின் முடிவு அருகாமையில் இருக்கிறது. அதாவது மகிமையின் நிலைமைக்கு மாறுகிறதற்கான காலம் சமீபமாயிருக்கிறது. பூமியின் கோத்திரத்தார் அனைவரும் ஆசீர்வதிக்கப்படும் காலம் சமீபமாயிருக்கிறது.

தீர்க்கதரிசிகளாலும் நம்முடைய கர்த்தராலும் முன்னுரைக்கப்பட்ட வரவிருக்கின்ற இந்த ஆசீர்வாதத்தின் பாடலை பாடுவதில் நாமும் இணைந்து கொள்ளுவோம்.

"களிகூறு! களிகூறு! வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட
காலம் வருகிறது!
களிகூறு! களிகூறு! வானந்தரம் செழிக்கும்!
வனாந்தரம் அனைத்தும் செழிக்கும் என்று
சீயோன் பிள்ளைகள் சீக்கிரத்தில் பாடுவார்கள்.
களிகூறு! களிகூறு! வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட
காலம் வருகிறது!
களிகூறு! களிகூறு! வானந்தரம் செழிக்கும்!
சுவிசேஷ பதாகை, அகலமாக விரிக்கப்பட்டது
உலகத்தின் மேல் ஜெயத்தை நாம் கையசைப்போம்.
ஒவ்வொரு சிருஷ்டியும், அடிமையோ, சுயதீனரோ,
மகிமையான பலியை வரவேற்கும்!"